# கடலில் மர்மம்



## 1

பாரமவுண்ட் ஹோட்டலின் முதல் மாடியில் பால்கனிக்கு அப்பால் அமைந்திருந்த ஐந்தாம் நம்பர் அறைக்குள்ளிலிருந்து வெளியே வந்தார் சுந்தரேசன். அவர், ஒரு கையால் கதவைச் சாத்தி, கதவின் பூட்டில் செருகப்பட்டிருந்த சாவியைத் திருகினார். கதவு பூட்டிக்கொண்டது. சாவியை இழுத்துக் கால்சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு பால்கனி முகப்பில் வந்து நின்றார். எதிரே ஹோட்டலுக்கு எதிரே ஓடிய சாலைக்கு அப்பால் வெறும் மணல் வெளியாகக் காட்சியளித்தது. மணல் வெளிக்கு அப்பால், அலைகடலின் ஓயாத

அலைகள் மடார், மடாரென எழும்பி மணற் பரப்பின் விளிம்பில் மோதி மடிந்தன. அலை கடலில் சிறிது தூரத்துக்கு அப்பால், நான்கு கப்பல்கள் ஆடி அசைந்துகொண்டு நின்றன. ஹோட்டலுக்கு இடது பக்கத்தில் சிறிது தூரத்தில், துறைமுகம் அமைந்திருந்தது. ஹோட்டலுக்கு வலது பக்கத்தில், வளைந்து நின்ற சமுத்திரத்தின் நீர்ப்பரப்பும், கடற்கரையை ஒட்டினாற்போல் ஓடிய நீண்ட சாலையும்தாம் தெரிந்தன.

சுந்தரேசன், வெகு நேரம் வரையில் பால்கனியில் நின்றபடியே சமுத்திரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் கண்கள் நீலக் கடலைப் பார்த்துக்கொண்டிருந்தனவே தவிர, அவருடைய மூளை தீவிரமாக எதையோ யோசித்துக் கொண்டிருந்தது. அவருடைய முகத்தைப் பார்த்து, அவர் என்ன யோசனை செய்கிறார், என்ன செய்யப்போகிறார் என்று ஒருவராலும் எளிதில் சொல்லிவிட முடியாது. அப்போதுதான் அவர் வாஸிலின் தடவி வாரிவிட்ட அவருடைய அழகான கிராப்பு, கட்டுப்படுத்த முடியாத காற்றினால் அலைக்கழிந்து விட்டது. அவர் கண்முன் வந்து விழும் தலைமயிரை அடிக்கடி இடது கையால் தள்ளிவிட்டுக் கொண்டார்.

நீலக்கடலில் மிதந்துகொண்டிருந்த கப்பல்களில் குப்பென்று அடுத்தடுத்து விளக்குகள் எரிய ஆரம்பித்தன. அதே சமயத்தில், ஹோட்டலின் எதிரேயிருந்த சாலை விளக்குகள்கூடக் கண் சிமிட்ட ஆரம்பித்து விட்டன. ஹோட்டலின் உள்ளேயும் அதே சமயத்தில் விளக்குகள் எரிந்தன.

சுந்தரேசன், சட்டென்று கைக்கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஆறு. அப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக இருட்ட ஆரம்பித்தது.

சுந்தரேசன், சட்டென்று திரும்பினார். மெல்ல நடந்து சென்று ஐந்தாம் நம்பர் அறைக்கு முன் நின்றார். கால்சட்டைப் பைக்குள்ளிருந்த சாவியை எடுத்து, கதவைத் திறந்தார். அறைக்குள்

நுழைந்து, மீண்டும் கதவை மூடிக்கொண்டார். உள்ளே ஒரே இருட்டாக இருந்தது. கதவின் பக்கத்தில் இருந்த ஸ்விட்சைத் தட்டினார்.

மெர்க்குரி விளக்கு, பளிச்சென்று வெளிச்சத்தை அள்ளி வீசியது. அந்த வெளிச்சத்தில், சுவர்களில் பச்சை நிற வர்ணம் பூசப்பட்ட அந்த அறை அழகாகக் காட்சியளித்தது. கட்டில், பீரோ, மேசை, டெலிபோன், ரேடியோ, நிலைக்கண்ணாடி – எல்லாம் அந்த அறையில் இருந்தன. சுந்தரேசன், சீப்பை எடுத்து நிலைக்கண்ணாடியின் முன் நின்று தலையை வாரிக்கொண்டார். பிறகு தன்னுடைய உருவத்தை உற்றுப் பார்த்தார்.

உயரமான அவருடைய உடம்புக்கு, நீல நிறச் சட்டையும், வெள்ளைக் கால்சட்டையும், கறுப்பு ஷூக்களும் மிகவும் பொருத்தமாக இருந்தன. அவருடைய உடம்புதான் கொஞ்சம் கறுப்பாக இருந்தது. ஆனாலும், கறுப்பு நிறம் அவருடைய அழகைக் கெடுக்கவில்லை. அவர் பீரோவைத் திறந்து, பச்சை நிற ஸில்க் டையை எடுத்துக் கட்டிக்கொண்டார். பிறகு, அறைக்கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார். டை கட்டிக்கொண்டதால், குளிர்க்காற்று இப்போது அடங்கியிருப்பதைப்போல் இருந்தது அவருக்கு.

அறையின் கதவை மீண்டும் பூட்டிவிட்டு, சாவியைப் பாதுகாப்பாகக் கால்சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு, மாடிப்படிகளின் வழியாகக் கீழே இறங்கினார். நேராகக் கடற்கரையை நோக்கி நடந்தார்.

அப்போது நன்றாக இருட்டிவிட்டது.

மணலில் நடந்து தண்ணீருக்குப் பக்கத்தில் போனதும் தன்னை யாராவது தொடர்ந்து வருகிறார்களா என்று பார்த்தார். அவர் பின்னால் அவரைத் தொடர்ந்து அவருடைய நிழல்கூட

வரவில்லை! ஏனென்றால் அந்த இடத்தில் ஒரே இருட்டாக இருந்தது.

அவர் தண்ணீரின் ஓரமாகவே, வலதுகைப் பக்கம் நடந்தார். சுமார் இரண்டு பர்லாங்கு தூரம் நடந்திருப்பார். கூவம் நதி சமுத்திரத்தில் வந்து விழும் இடம் வந்தது. அந்த இடத்துக்குச் சமீபத்தில் வந்ததும், அவர் நின்றுவிட்டார். அவருடைய கண்கள், கூவம் நதியைக் கடக்கக் கட்டப்பட்டிருந்த இரும்பு வாராவதியின் மேல் பார்வையைச் செலுத்தின.

இரும்பு வாராவதியின் மீது மங்கிய விளக்கு வெளிச்சத்தில், ஒரு கரிய உருவம் உட்கார்ந்து, குழல் ஊதிக் கொண்டிருந்தது அந்த உருவம், ஒரு சினிமாப் பாட்டை குழல் வழியாகப் பொழிந்து தள்ளிற்று. காற்றில் மிதந்துவந்த குழலோசை வெகு தூரம் வரையில் தெளிவாகக் கேட்டது.

சுந்தரேசன், கால்சட்டைப் பைக்குள் கையைவிட்டு, ஒரு சிறிய டார்ச் லைட்டை வெளியே எடுத்தார். அந்த டார்ச் லைட், கைக்கு அடக்கமாக, சிகரெட் பெட்டியைப்போல் இருந்தது. அதன் பின்னாலிருந்த ஸ்விட்ச்சை அமுக்கிவிட்டார். டார்ச் லைட் பளிச்சென்று எரிந்து விட்டு அணைந்து விட்டது. அரை நிமிஷம் கழித்து மறுபடியும் ஸ்விட்ச்சை அமுக்கிவிட்டார். மறுபடியும் டார்ச் லைட் எரிந்துவிட்டு அணைந்துவிட்டது. சுந்தரேசன், அதை மறுபடியும் பாக்கெட்டில் போட்டுக்கொண்டு, சுற்றுமுற்றும் சற்று உற்றுப்பார்த்தார்.

அவருக்குப் பக்கத்திலோ, சுற்றுப்புறத்திலோ ஒருவரும் இல்லை.

இரும்பு வாராவதியின் மேல் உட்கார்ந்துகொண்டிருந்த அந்தக் கரிய ஆசாமி, குழல் ஊதுவதை முடித்துவிட்டு எழுந்தான். குழலை இடுப்பில் செருகிக்கொண்டு பாலத்தை

விட்டுக் கீழே இறங்கினான். பாலத்தின் கீழே, கூவம் நதியின் ஓரத்தில் ஒரு சிறிய மோட்டார்ப் படகு நின்றிருந்தது. அவன் படகைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்துவிட்டுப் படகில் தாவினான். அவன் மோட்டாரை ஸ்டார்ட் செய்யாமல், படகைச் சத்தமில்லாமல் துடுப்பால் தள்ளிக்கொண்டு, சமுத்திரத்தை நோக்கிச் சென்றான்.

கூவம் நதிக்கடலில் கலக்கும் இடத்தில் ஓர் ஓரமாகக் கொண்டுவந்து படகை நிறுத்தினான் அவன்.

சுந்தரேசன் தாவிக் குதித்துப் படகில் ஏறி, சௌகரியமாக உட்கார்ந்து கொண்டார். அவர் படகில் ஏறியதும் ஒன்றும் பேசவில்லை, பாக்கெட்டிலிருந்து எதையோ எடுத்தார். இருட்டில், நோட்டுகளை எண்ணும் சத்தம் கேட்டது. நோட்டுகளை எண்ணி அவனிடம் நீட்டினார். "பொன்னா! இதில் ஐம்பது ரூபாய் இருக்கிறது. வைத்துக்கொள். நான் இந்தப் படகில் ஏறி எங்கே போனேன் என்பதை ஒருவருக்கும் சொல்லக்கூடாது. உன்னை ஒருவரும் கேட்கப்போவதில்லை. அப்படி யாராவது கேட்டாலும் சொல்லக்கூடாது! தெரிகிறதா?" என்று மிகக் கண்டிப்பாகச் சொன்னார் சுந்தரேசன்.

பொன்னன், பணத்தை வாங்கிப் பத்திரப்படுத்திக் கொண்டான். "அப்படிச் சொன்னால்?" என்று திருப்பிக் கேட்டான் பொன்னன்.

"உனக்கு உண்மையிலேயே நெஞ்சழுத்தம் இருக்கிறது. இது விஷயமாக என்னுடைய முடிவைச் சொல்லிவிடுகிறேன். உன்னுடைய வாயைக் கட்டத்தான் ஐம்பது ரூபாய் கொடுத்திருக்கிறேன். அதை வாங்கிக்கொண்டு, வாயைக் கட்டாவிட்டால் உன்னுடைய முதுகெலும்பைக் கழட்டி உன் கண்ணெதிரே காட்டுவேன்! நான் சொன்னால் சொன்னதுதான்!" என்றார் சுந்தரேசன்.

பொன்னன் மெல்லச் சிரித்தான். சிரித்துக்கொண்டே, "இப்போது எங்கே போகவேண்டும்?" என்று கேட்டான்.

"படகின் விளக்கை மட்டும் போடாதே. மோட்டாரை ஸ்டார்ட் செய்து, அதோ அந்தக் கப்பல்கள் நிற்குமிடத்திற்குக் கொண்டு போ!"

"அந்தப் பக்கம் விளக்கில்லாமல் போகக்கூடாதே!"

"பரவாயில்லை."

"நீங்கள் சொல்லுகிறீர்கள் பரவாயில்லை என்று, கடைசியில் நான்தானே அகப்பட்டுக் கொள்வேன்!"

"நீ எப்படிப்பட்ட ஆபத்தில் மாட்டிக்கொண்டாலும் என்னால் உன்னைக் காப்பாற்ற முடியும். தைரியமாய்ப் போ."

பொன்னன் அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. மோட்டாரை ஸ்டார்ட் செய்தான். அந்த மோட்டார்ப்படகு தண்ணீரை வாரி இறைத்துக்கொண்டு, ஜிவ்வென்று கிளம்பியது. வரவரப் படகின் வேகம் அதிகமாக்கியது.

சுமார் பத்து நிமிடத்துக்குமேல் படகு ஓடியதும், முதல் கப்பலுக்குச் சமீபத்தில் அவர்கள் வந்துவிட்டார்கள்.

அந்தக் கப்பல், மிகப் பிரும்மாண்டமாகக் காட்சியளித்தது. கப்பலின் மேல் தளத்தில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. ஆனால், கப்பலைச் சுற்றி வெளிப்பக்கம் கன்னங்கரிய இருள் தான் சூழ்ந்திருந்தது.

கப்பலுக்குச் சமீபத்தில் வந்ததும், "மோட்டாரை நிறுத்தவிடு பொன்னா" என்றார் சுந்தரேசன்.

பொன்னன் மோட்டாரை நிறுத்திவிட்டான்.

"படகை மெல்லத் துடுப்பால் தள்ளிக்கொண்டு, பக்கவாட்டில், கப்பலுக்கு வெகு சமீபத்தில் கொண்டு போ!" என்றார் சுந்தரேசன்.

பொன்னன் சந்தடி செய்யாமல் நிதானமாகப் படகை ஓட்டினான். கப்பலுக்குப் பக்கத்தில் நிறுத்தினான். படகு நின்ற இடத்திலிருந்து கப்பலுக்குள்ளே ஏறிச்செல்ல இரும்பு ஏணி பொருத்தப்பட்டிருந்தது.

சுந்தரேசன், எழுந்தார். அந்த ஏணியைப் பிடித்துக்கொண்டு டார்ச்லைட்டை அடித்துக் கப்பலின் பெயரைப் பார்த்தார்.

"ஜலராணி" – அதுதான் கப்பலின் பெயர்.

அவர் கப்பென்று டார்ச்லைட்டை அணைத்துவிட்டுத் திரும்பினார். "பொன்னா! நீ இங்கேயே இரு. நான் கப்பலின் தளத்துக்குப் போய், இன்னும் சிறிது நேரத்தில் திரும்பி வருகிறேன். நான் திரும்பிவரப் பத்து நிமிஷம் ஆகலாம். பதினைந்து நிமிஷம் பிடித்தாலும் பிடிக்கும். அல்லது, அரைமணி நேரம் ஆனாலும் ஆகும்! நான் வந்ததும் உடனே அவசரமாகப் போகவேண்டும்" என்றார்.

"இங்கேயே, இதே இடத்திலேயே இருக்கச்சொல்லு கிறீர்களா?"

"ஆமாம். நான் ஏணியிலிருந்து இறங்கி வரும்போது வெகு வேகமாக வருவேன். ஒருவேளை, கப்பலின் தளத்திலிருந்து படகில் குதித்தாலும் குதித்துவிடுவேன். என்னைப் பார்த்தவுடனே நீ படகை ஸ்டார்ட் செய்துவிடு."

"சரி ஐயா. நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால் மேலே ஏதாவது கலாட்டா ஆகுமோ என்று நினைக்கிறேன்."

"அப்படி ஏதாவது கலாட்டா ஆனாலும் நீ பயப்பட வேண்டாம். இதெல்லாம் எனக்குச் சாதாரண விஷயம்."

"சரி."

சுந்தரேசன் கிடுகிடுவென்று ஏணியின் மேல் ஏறினார். அவருடைய ரப்பர் ஷூக்கள் வளைந்து கொடுத்ததால் ஏணிமேல் வேகமாக ஏறுவதற்குச் சௌகரியமாக இருந்தது.

ஏணியின் உச்சியை அடைந்ததும், தலையை மட்டும் நீட்டிப் பார்த்தார். மேல் தளத்தில் இரண்டு விளக்குகள் எரிந்தன. ஆனால் இரண்டு விளக்குகளும் மங்கலாக எரிந்துகொண்டிருந்தன. தளத்தின் மேல், சில மரப்பெட்டிகளும் பீப்பாய்களும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

கப்பலின் உள்ளே போகும் வாயிலில் காலர் இல்லாத வெள்ளைக் கோட்டும், வெள்ளைக் கால்சட்டையும், வெள்ளை நிற கான்வாஸ ஷூக்களும் அணிந்த ஒருவன், துப்பாக்கியைத் தோளின்மீது சாய்த்துக்கொண்டு, இப்படியும் அப்படியம் உலாவிக்கொண்டிருந்தான்.

அவன், வேறு பக்கமாகத் திரும்பிக்கொண்டிருந்தபோது, சுந்தரேசன் தளத்தில் குதித்தார். அவர் குதித்தார் என்று சொல்ல முடியாது. அவர் குதித்தபோது, கொஞ்சங்கூடச் சத்தம் எழவில்லை. அவர் தளத்தில் குதித்ததும், சட்டென்று பதுங்கிப்போய், ஒரு பீப்பாயின் பக்கத்தில் ஒளிந்து உட்கார்ந்து கொண்டார்.

சுந்தரேசன் கைக்கடிகாரத்தைப் பார்த்தார்.

மணி ஏழு. ரேடியம் டயல் பதித்த அவருடைய கடிகாரம் இருட்டில் பளிச்சென்று தெரிந்தது.

அவர் மெல்லப் பதுங்கிப் பதுங்கி, அந்தக் காவல்காரனுக்குச் சமீபத்தில் போய்விட்டார்.

அவன் திரும்பிய சமயம், அவன் மீது பாய்ந்தார். அவன் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கி அவனுடைய முகத்தின் மீது மோதினார். முகத்தில் சரியான அடி விழுந்திருக்க வேண்டும். அவன் அப்படியே மரம் மாதிரிச் சாய்ந்தான்!

சுந்தரேசன், துப்பாக்கியை ஓர் ஓரமாகப் போட்டுவிட்டு, பதுங்கிக்கொண்டு யாராவது வருகிறார்களா என்று சுற்றுமுற்றும் கவனித்தார்.

கப்பலின் உள்ளேயிருந்து ஒருவரும் வரவில்லை. கப்பலின் உள்ளே யாராவது இருக்கிறார்களா இல்லையா என்பதே தெரியவில்லை.

சுந்தரேசன், கீழே விழுந்த அந்த ஆசாமியை இழுத்து இரண்டு பீப்பாய்களுக்கு மத்தியில் போட்டுவிட்டுக் கப்பலுக்குள் சென்றார்.

முதலில், காப்டனின் அறை தெரிந்தது. அறையின் கதவு மூடப்பட்டிருந்தது. அவர் மெல்லக் கதவின் கைப்பிடியைப் பிடித்துத் திருகினார்.

கதவு திறந்துகொண்டது.

சுந்தரேசன் உள்ளே சென்றதும், கதவை மூடித் தாழிட்டுவிட்டு அறைக்குள் கண்ணோட்டத்தைச் செலுத்தினார்.

அந்த அறை சிறியதாகத்தான் இருந்தது. அறையில் ஒரு மூலையில், விலையுயர்ந்த அழகான மேஜை ஒன்று போடப்பட்டிருந்தது. மேஜைக்கு முன் இரண்டு நாற்காலிகளும், மேஜைக்கு அப்பால் ஒரு சுழல் நாற்காலியும் போடப்பட்டிருந்தன.

மேஜையின் மீது ஒரு விளக்கு, வெளிச்சத்தை வாரி இறைத்துக் கொண்டிருந்தது. அதைத்தவிர, மேஜையின் மீது பவுண்டன் பேனா, பென்சில்களைத் தவிர ஒன்றுமே இல்லை.

சுழல் நாற்காலிக்குப் பின்னால், தலைக்கு மேல் ஒரு பெரிய போட்டோ மாட்டப்பட்டிருந்தது. அந்தப் போட்டோவில், சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க அழகான மனிதர் ஒருவர் காட்சியளித்தார். அவர் அணிந்திருந்த உடையிலிருந்து அவர் தான் கப்பலின் காப்டன் என்று சொல்லிவிடலாம். தெளிவாக, போட்டோவின் கீழே 'காப்டன் கோபிநாத்' என்று எழுதியிருந்தது.

சுந்தரேசன் மேஜை டிராயர்களை இழுத்துப் பார்த்தார். அவை பூட்டப்பட்டுக் கிடந்தன. உடனே, கொத்துச் சாவியை எடுத்தார். இரண்டு மூன்று சாவிகளைப் போட்டுத் திருகிப் பார்த்தார்.

இரண்டு நிமிஷங்களுக்குள் மேசை டிராயர்களைத் திறந்துவிட்டார். உள்ளே குப்பை குப்பையாக ஏதோ காகிதங்கள் கிடந்தன. அவற்றையெல்லாம் எடுத்தார். அவசரம் அவசரமாகப் படித்துப் பார்த்துவிட்டு, மறுபடியும் அவற்றை உள்ளே போட்டுவிட்டார்.

அவர் அந்த அறையிலிருந்து சுற்றுமுற்றும் பார்த்தார். அந்த அறைக்குள்ளிருந்து வெளியே பார்ப்பதற்கு ஒரு வட்டமான சந்து இருந்தது. அந்தச் சந்திலே பார்த்தார்.

தூரத்தில், கப்பலை நோக்கிப் பறந்து வந்துகொண்டிருந்தது ஒரு மோட்டார்ப்படகு. அதனுடைய விளக்குகள் இரண்டும், மோட்டார்காரின் ஹெட்லைட்டுகளைப்போல் வெளிச்சத்தை அள்ளி வீசின. சுந்தரேசன் சட்டென்று பாய்ந்து ஓடிப்போய்க் கதவைத் திறந்தார். வெளியே தளத்துக்கு ஓடிவந்தார். இரண்டு பீப்பாய்களுக்கு மத்தியில் விழுந்துகிடந்த அந்தக் காவல்காரன் அப்போதுதான் அசைந்துகொடுத்தான்.

இன்னும் சிறிதுநேரத்தில் அவன் எழுந்து உட்கார்ந்து விடுவான் என்று புரிந்துகொண்ட சுந்தரேசன், ஓடிப்போய் ஏணிப்படிகளில் வேகமாக இறங்கினார்.

அவரைப் பார்த்தவுடனே பொன்னன் மோட்டாரை ஸ்டார்ட் செய்தான். ஆனால், விளக்குகளை மட்டும் அவன் போடவில்லை.

சுந்தரேசன், பாதி தூரம்தான் இறங்கியிருப்பார். அதற்குள், தூரத்தில் வெளிச்சத்தை அள்ளிவீசிக்கொண்டு வரும் மோட்டார்ப்படகின் சத்தம் அதிகமாகிக்கொண்டே வந்தது. அவர் அப்படியே படகில் குதித்தார். படகு, அவர் குதித்த வேகத்தில் பயங்கரமாக ஆடியது.

"பொன்னா! சீக்கிரம் விடு. அந்தப் படகில் காப்டன் வருகிறார் என்று நினைக்கிறேன். கப்பலைச் சுற்றிக்கொண்டு மறைந்துபோய்விட்டால் நம்மை ஒருவரும் கவனிக்க மாட்டார்கள்" என்றார் சுந்தரேசன்.

"சரி, நீங்கள் இனிமேல் பயப்பட வேண்டியதே இல்லை" என்று சொல்லிக்கொண்டே படகை அறுபது மைல் வேகத்தில் பறக்கவிட்டான்!

ஜலராணி என்னும் அந்தப் பிரும்மாண்டமான கப்பலைச் சுற்றிக்கொண்டு, பொன்னனின் படகு இருளில் ஓடியது.

அவன் படகை மீண்டும், கூவம் நதி, கடலில் கலக்கும் இடத்தை நோக்கி விட்டான். அதற்குள் சுந்தரேசன் சொன்னார்: "புறப்பட்ட இடத்துக்கே போகவேண்டாம். நேராக மெரீனாவைக் கடந்து, வெலிங்டன் பள்ளிக்கூடத்தின் எதிர்ப்பக்கமாக விட்டுவிடு, அங்கிருந்து போய்விடுகிறேன்."

அதைக் கேட்டதும் பொன்னனுக்கு ஆச்சரியமாக இருந்தது. "ஏன் இப்படி பயந்து சாகிறீர்கள்? உங்களை மெரீனாவுக்கு அப்பால் விட்டுவிட்டு, நான் மட்டும் தனியாகத்தானே திரும்பி வரவேண்டும். இரும்பு வாராவதியின் சமீபத்தில்தான் என்னுடைய படகு எப்போதும் கிடக்கும்" என்றான்.

அதை அவன் சொல்லி முடித்ததும், சுந்தரேசன் யோசித்தார்; 'போகும்போது பயந்து செத்தவன் பொன்னன், அவன் என்னடாவென்றால், இப்போது நம்மைப் பார்த்துக் கேலியாகப் பேசுகிறானே! அவனுக்கு இப்போது மட்டும் எங்கிருந்து தைரியம் வந்துவிட்டது!'

அவர் சொன்னார்: "நீ ஒன்றும் எனக்குப் பாடம் சொல்ல வேண்டியதில்லை. நான் போகச்சொல்லும் இடத்துக்கு நீ போ. அதற்குத் தகுந்த கூலி கொடுத்திருக்கிறேன். ஞாபகம் வைத்துக்கொள்."

பொன்னன் இந்த மாதிரிப் பதிலை எதிர்பார்த்தவன்போல் பேச ஆரம்பித்தான்: "எனக்கு ஒன்றுமே புரியவில்லை. காலையில் வந்து, இருட்டியதும் படகு வேண்டும் என்றீர்கள். உங்களை முன் பின் பார்த்தது கிடையாது. இருட்டிவிட்டால், ஒருவரும் என்னுடைய படகில் ஏறி உல்லாசமாகப் போவது கிடையாது. அதுவும் இந்தக் குளிர்காலத்தில், படகில் யாராவது சுற்றுவார்களா? என்று நான் விழித்தபோதே, என் கையில் இருபது ரூபாயைத் திணித்துவிட்டு, உங்களுடைய வருகையை எதிர்பார்த்து இரும்பு வாராவதியின் மீது உட்கார்ந்திருக்கும்படி சொன்னீர்கள். அந்தச் சமயத்திலிருந்து பணத்திற்காகத்தான் உங்களிடம் குருட்டுத்தனமாக ஏதோ சொன்னதைச் செய்கிறேன். ஆனால், உங்கள் போக்கு மிகவும் விசித்திரமாக இருக்கிறது. எனக்குக் கொஞ்சம்கூடப் புரியவேயில்லை."

இதைக் கேட்டதும் சுந்தரேசன் கடகடவென்று சிரித்தார். விழுந்து விழுந்து சிரித்தார். "என்னுடைய போக்கைப்பற்றி நீ கவலைப்படாதே! நான் எந்தவிதமான தப்பும் செய்யவில்லை. அப்படி நான் ஏதாவது தப்பு செய்திருந்தாலும், அதற்கு நீ உடந்தையாக இருந்தாய் என்று சொல்ல முடியாது. ஏனென்றால், நான் என்ன செய்தேன், ஜலராணிக்கு எதற்குச் சென்றேன், அடுத்தபடியாக என்ன செய்யப்போகிறேன் என்பதெல்லாம் உனக்கு ஒன்றுமே தெரியாது. ஆகையால், எதைப்பற்றியும் நீ கவலைப்பட வேண்டாம். படகில் ஏற்றிச் சென்றதையும் மறந்துவிடு."

மோட்டார்ப்படகு மெரீனாவைக் கடந்து, வெலிங்டன் பள்ளிக்கூடத்துக்கு ஏதிரே நின்றது. பொன்னன் மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

சுந்தரேசன் படகிலிருந்து மணலில் குதித்தார். இருட்டில் டையைச் சரிப்படுத்திக்கொண்டே வேகமாக நடந்தார்.

சாலைக்கு வந்ததும், வாடகைக்கார் ஒன்றைப் பிடித்து அதில் ஏறி உட்கார்ந்தார். வாடகைக் கார் பாரமவுண்ட் ஹோட்டலை நோக்கிப் பறந்தது.

ஹோட்டலுக்குச் சென்றதும், தன்னுடைய அறைக்குச் சாப்பாடு கொண்டுவரும்படி சொல்லிவிட்டு, மாடிமேல் சென்றார்.

அறைக்கு வந்ததும் டையைக் கழட்டி மேஜை மேல் போட்டார். ஷூக்களைக் கழட்டிவிட்டு, நாற்காலியில் உட்கார்ந்து பெருமூச்சு விட்டார்.

அவருடைய மூளை தீவிரமாக யோசனை செய்தது. வெகுநேரம் யோசனை செய்தபடியே உட்கார்ந்திருந்தார்.

ஹோட்டல் பையன் சாப்பாடு கொண்டுவந்தான்.

+++

# 2

பொழுது புலர்ந்து மணி ஆறுக்குமேல் ஆகிவிட்டது.

சுந்தரேசன், காப்பி பலகாரம் சாப்பிட்டுவிட்டு தம்முடைய சாமான்களைப் பெட்டிகளில் அடுக்கினார். அடுக்கி முடிந்ததும், இரண்டு பெட்டிகளையும் எடுத்து மேஜைமேல் வைத்துவிட்டு, அறையை விட்டு வெளியே வந்தார். பால்கனியில் நின்று கவனித்தார்.

தூரத்திலே, ஜலராணி என்னும் அந்தக் கப்பலை இப்போது காணோம்! மற்ற மூன்று கப்பல்களும் அங்கேயே நின்று கொண்டிருந்தன. அவர் ஹோட்டல் பையனைக் கூப்பிட்டு, வாடகைக்கார் கொண்டுவரும்படி சொன்னார்.

சிறிது நேரத்தில் வாடகைக்கார் வந்து நின்றது.

சுந்தரேசன், ஹோட்டலுக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டு, வாடகைக்காரில் ஏறி உட்கார்ந்தார்.

ஹோட்டல் பையன், பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்து காரில் வைத்தான்.

அவனுடைய கையிலே முழுசாக ஒரு ரூபாய் விழுந்தது.

"விமான நிலையத்துக்கு ஓட்டு" என்று உத்தரவிட்டார் சுந்தரேசன்.

காரோட்டி, தலையை ஆட்டிவிட்டு காரைப் பறக்க விட்டான்.

விமான நிலையம் வந்தது.

சுந்தரேசன், கீழே இறங்கி விமான நிலையத்திலிருந்த அதிகாரியின் அறைக்குள் மெல்ல நுழைந்தார்.

"குட்மார்னிங்" என்று அவரை வரவேற்றார் விமான நிலைய அதிகாரி.

"குட்மார்னிங். என் பெயர் சுந்தரேசன். என்னுடைய தொழிலைப் பற்றி இங்கே குறிப்பிட வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். இங்கிருந்து நீலத்தீவு எவ்வளவு தூரம் இருக்கிறது என்று தெரியவேண்டும். இரண்டாவதாக, இங்கிருந்து நேராக நீலத்தீவுக்குப் போக விமான வசதி இருக்கிறதா என்று தெரியவேண்டும். மூன்றாவதாக, முடிந்தால் உடனே நான் அங்கே போயாக வேண்டும்" என்று ஒரே மூச்சில் பேசிமுடித்தார் சுந்தரேசன்.

விமான நிலைய அதிகாரி, ஏதோ புத்தகங்களைப் புரட்டினார். படம் ஒன்றை உற்றுப்பார்த்தார். பிறகு அவற்றை மடித்துப் பக்கத்திலிருந்த ஸ்டாண்டின்மேல் போட்டுவிட்டுத் தொண்டையைக் கனைத்துக்கொண்டு சொன்னார், "நீலத் தீவுக்கு இதற்கு முன் போயிருக்கிறீர்களா? என்று எனக்குத் தெரியாது. அப்படிப் போயிருந்தால், இப்போது போகமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்!"

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று ஆவலுடன் கேட்டார் சுந்தரேசன்.

"நீலத்தீவு என்பது மிகவும் சிறிய தீவு. அங்கே சாசுவதமாகக் குடியிருப்பவர்கள் மிகவும் குறைவு. அந்தத் தீவு இங்கிருந்து ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. அந்தத் தீவில், கோடைக்காலத்தில் மிகவும் சுகமாக இருக்கும். மற்றச் சமயங்களில் யாரும் அங்கே போவதில்லை! ஆகையால் இந்த மாதத்தில் நீங்கள் போவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!" என்றார்.

சுந்தரேசன் அவர் சொல்வது சரி என்பதைப்போல் தலையை ஆட்டினார். பிறகு, "நான் முக்கியமான வேலையாக உடனே அந்தத் தீவுக்குப் போகவேண்டும்" என்றார்.

அங்கே போகிறவர்கள் ஒருவரும் வேலையாகப் போவது கிடையாது! நீங்கள் மட்டும்தான் வேலையாகப் போகிறேன் என்கிறீர்கள். அந்தத் தீவுக்குப் போகிறவர்கள் உல்லாசமாக பொழுதைக் கழிக்கத்தான் போவது வழக்கம்."

"நீங்கள் சொல்வது சரி. நான் அங்கே போகும் காரணம் வேறு. உடனே நான் போயாக வேண்டும்."

"கோடைக்காலத்தில் மட்டுமே அந்தத் தீவுக்கு விமான சர்வீஸ் உண்டு. மற்றக் காலங்களில் கிடையாது. உங்களுக்கு வேண்டுமானால், தனியாக ஒரு விமானத்தை ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்."

"எவ்வளவு பணம் ஆனாலும் பாதகமில்லை. விமானத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். இன்னொரு விஷயம். நான் அந்தத் தீவுக்குச் சென்றதும், விமானத்தைத் திருப்பி அனுப்பிவிடுகிறேன். மறுபடியும் விமானம் வேண்டுமானால், அங்கிருந்து தந்தி கொடுக்கிறேன். மறுபடியும் விமானத்தை அனுப்ப முடியுமா உங்களால்?"

"ஏன் முடியாது? பணம் செய்யாத வேலை இந்த உலகத்தில் எதுவுமே கிடையாது" என்றார் விமான நிலைய அதிகாரி.

சுந்தரேசன் சிரித்துவிட்டு, செக் ஒன்றை எழுதிக் கொடுத்தார்.

+++

# 3

அந்த விமானம் மேகத்திரையைக் கிழித்துக்கொண்டு காற்றாய்ப் பறந்தது.

மணிக்கு இருநூறு மைல் வேகத்தில் பறந்த அந்தச் சின்னஞ் சிறிய விமானம், ஐந்து மணி நேர இடைவிடாத பிரயாணத்துக்குப் பின், நீலத்தீவைக் கண்டுபிடித்தது.

சுந்தரேசன், விமானத்திலிருந்து பார்த்தார். கீழே கண்ணுக் கெட்டிய வரையில் நீலநிறக் கடல்தான் வியாபித்திருந்தது. அந்தக் கடலின் மத்தியிலே, தண்ணீரில் மிதக்கும் சிறிய பந்தைப்போல் நீலத்தீவு காட்சியளித்தது.

விமானி வெகு ஜாக்கிரதையாக வட்டமிட்டு, விமானத்தைத் தீவில் இறக்கினார்.

விமானிதான் முதலில் இறங்கினார். பின்னாலேயே சுந்தரேசன் இறங்கினார். அவர் இறங்கியதும், சுற்றுமுற்றும் பார்த்தார். அந்தத் தீவில் தென்னை மரங்கள் ஏராளமாக வளர்ந்திருந்தன. அந்தச் சின்னத் தீவில் ஜன நடமாட்டமே அதிகமாகக் காணோம். வீடுகளும் அதிகமாகக் காணோம்.

சிறிது தூரத்தில் ஒரு பெரிய கட்டடம் தெரிந்தது. அந்தக் கட்டடத்தின் பக்கத்திலிருந்து ஒரு பையன் ஓடிவந்தான். அந்தப் பையனுக்குச் சுமார் பதினாறு வயது இருக்கும். அவன் அரைக்கால் சட்டையும், அரைக்கைச் சட்டையம் அணிந் திருந்தான். அவன் அருகில் ஓடிவந்ததும், "என்ன ஐயா, பெட்டி சாமான் ஏதாவது இருக்கின்றனவா?'' என்று பழக்கப்பட்டவனைப்போல் கேட்டான்.

"பெட்டிகள் இருக்கின்றன. எடுத்துக்கொண்டு உன்னால் வரமுடியுமா?" என்று கேட்டார் சுந்தரேசன்.

அவன் விமானத்துக்குள் ஏறினான். மறுவினாடி, ஒவ்வொரு கையிலும் ஒவ்வொரு பெட்டியைத் தூக்கிக்கொண்டு இறங்கி வந்தான்.

"இங்கே டாக்சி கிடையாதா?" என்று அவனைப் பார்த்துக் கேட்டார் சுந்தரேசன்.

அந்தப் பையன் சொன்னான்: "இந்தச் சின்னத் தீவில் சுற்றுவதற்கு டாக்சி வேண்டாமே சார். இங்கே டாக்சி கிடையாது. வாடகைக்குக் கார்கள் வேண்டுமானால் கொடுப்பார்கள். நீங்களே டிரைவ் செய்துகொள்ள வேண்டும்!"

"சரி, இங்கே தங்குவதற்குச் சௌகரியமான இடம் எங்கே இருக்கிறது?"

"அதோ தெரிகிறது பாருங்கள் பெரிய கட்டடம், அதுதான் ஹோட்டல் வஸந்த விலாஸ். அங்கே தங்குவதற்குச் சௌகரியமாக இருக்கும். அமைதியான இடம். வேண்டுமானால், சிறிய வீடு ஒன்று பார்த்துத் தருகிறேன்!"

"ஹோட்டலில் தங்குவதற்கு எனக்குப் பிடிக்கவில்லை. தனி வீடாகப் பார்த்துக்கொடு."

"என்னுடன் வாருங்கள் போகலாம்" என்று சொல்லிவிட்டு முன்னால் நடந்தான் அந்தப் பையன்.

சுந்தரேசன் விமானியைப் பார்த்து, "நீங்கள் இப்பொழுது உடனே போகவேண்டுமா?" என்று கேட்டார்.

"இன்னும் ஒரு மணி நேரத்தில் புறப்பட்டுப் போய்விடுவேன். நீங்கள் போகலாம். என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்" என்றார் விமானி.

"அப்படியானால் மறுபடியும் சந்திப்போம்" என்று சொல்லிவிட்டு, அந்தப் பையனைத் தொடர்ந்தார் சுந்தரேசன்.

"தம்பி, உன் பெயர் என்ன?" என்று அந்தப் பையனைக் கேட்டார் சுந்தரேசன்.

"என் பெயர் ஜோசப்" என்றான் அவன்.

"நீ எப்பொழுதும் இங்கேயேதான் இருப்பாயா?" என்று ஆதரவுடன் அனுதாபக் குரலில் கேட்டார் சுந்தரேசன்.

"ஆமாம். இந்தியாவிலிருந்து வந்தவன் சார் நான்."

"அப்படியா? நானும் இந்தியாவிலிருந்துதான் வருகிறேன். நீ ஏன் இங்கே வந்துவிட்டாய்?"

"நான் இங்கே வந்து சேர்ந்தது ஒரு சிறிய கதை."

"அதைச் சொல்லேன், கேட்கலாம். பெரிய கதையாக இருந்தாலும் நான் கேட்பதற்குத் தயாராக இருக்கிறேன்."

"என்னுடைய அப்பாவும், அம்மாவும் இறந்து எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன. என்னுடைய பெரியப்பாதான் என்னை வளர்த்துவந்தார். அவர் என்னை அன்புடன் நடத்தவில்லை. அவர் என்னிடம் கொடுமையாக நடந்துகொண்டார். படித்துக் கொண்டிருந்த நான் படிப்பை விட்டுவிட்டு, மதுரையிலிருந்து சென்னைக்கு ஓடிவந்துவிட்டேன். வெளி தேசத்திற்குப் போனால் வேலை செய்து நிறையப் பணம் சேர்க்கலாம் என்ற குருட்டு எண்ணத்தில், திருட்டுத்தனமாக ஒரு கப்பலில் ஏறிவிட்டேன். அது அமெரிக்காவிற்குச் செல்லும் கப்பல். கப்பலில் மூன்று நாள்கள் ஒளிந்திருந்தேன். வழியில், கப்பலில் நான் ஒளிந்திருப்பதைக் காப்டன் பார்த்துவிட்டு, இந்தத் தீவில்

விட்டுவிட்டுப் போய்விட்டார்! இங்கிருந்து இந்தியாவுக்கோ, வேறு ஊருக்கோ போகப் பணம் இல்லை!"

"ரொம்பவும் துணிச்சல்காரன் போலிக்கிறதே நீ!" என்றார் சுந்தரேசன்.

"அப்படித்தான் எல்லோரும் சொல்லுகிறார்கள்... இதோ, இந்த வீடுதான், மாதம் இருபது ரூபாய் வாடகை. கோடைக்காலத்தில் இருநூறு ரூபாய் கொடுத்தால்கூடக் கிடைக்காது" என்று அந்த வீட்டைக் காட்டினான் ஜோசப்.

அந்த வீடு மிகவும் சிறிய வீடு. ஆனால், பார்ப்பதற்கு அழகாக இருந்தது. வீட்டைச் சுற்றிலும் புல்லும் பூண்டும் முளைத்துக் கிடந்தன.

"இந்த வீட்டின் சொந்தக்காரர் பக்கத்து வீட்டில் இருக்கிறார். நான் போய்ச் சாவி வாங்கிக்கொண்டு வருகிறேன். இங்கேயே இருங்கள்" என்று சொல்லி, பெட்டிகளைக் கீழே வைத்துவிட்டு ஓடினான் ஜோசப்.

இரண்டு நிமிஷங்கள் கழித்து, அவன் சாவியுடன் ஓடி வந்தான். வீட்டைத் திறந்துவிட்டான்.

வீட்டிற்குள் நுழைந்ததும், ஒரு சிறிய ஹால் தெரிந்தது. ஹாலுக்குப் பக்கத்தில் ஒரு சிறிய படுக்கை அறையும், ஹாலுக்குப் பின்னால் சமையல் அறையும் இருந்தன. சமையல் அறைக்குப் பக்கத்தில் குளிக்கும் அறை இருந்தது. அவ்வளவுதான்.

"இந்த வீடு போதுமா? சாப்பாடு, ஹோட்டலில்தான். இந்த வீட்டுக்கு ஒரு மாத வாடகையை இப்போதே கொடுத்து விடுகிறேன். கொண்டுபோய்க் கொடுத்துவிடு" என்று சொல்லி, இருபது ரூபாய் எடுத்துக் கொடுத்தார் சுந்தரேசன்.